**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial

Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 329/2023 P.W.8/L.W.8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. ராஜேந்திரன் (காவல் உதவி ஆய்வாளர்) | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 05.11.2025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்பொழுது கருங்கல் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். இதற்கு முன்பு நான் வெள்ளிச்சந்தை காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது தலைமை காவலர் ரமேஷ் என்பவர் காவல்நிலையக்குற்ற எண். 92/2023 சட்டப்பிரிவுகள் 294(பி), 323, 324, 506 பத்தி இரண்டு இ.த.ச 1860 ன் கீழ் வழக்குப்பதிவு செய்து எனது விசாரணைக்கு வைத்ததை நான் எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன்.

2. பின்னர் 02.07.2023 ம் தேதி காலை 09.30 மணிக்கு வழக்கின் சம்பவ இடம் சென்று சாட்சிகள் குமார், கோலப்பதாஸ் மற்றும் சதீஸ்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 5 மற்றும் பார்வை மகசர் அ.சா.ஆ.6 ஆகும்.**

3. பட்டியல் சாட்சிகள் நீலகண்டபிள்ளை, ஈஸ்வரபிள்ளை மகன் நீலகண்டபிள்ளை, வினிஷ், பார்வை மகசர் சாட்சிகள் குமார், கோலப்பதாஸ் மற்றும் சதீஸ்குமார் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை பதிவுச் செய்த தலைமை காவலர் ரமேஷ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுச் செய்தேன். காயம்பட்ட சாட்சி 1 நீலகண்டபிள்ளை என்பவக்கு சிகிட்சை அளித்த மருத்துவர் இளைய செல்வன் என்பவரை விசாரித்து காயச்சான்று பெற்றேன்.

4. மருத்துவர் சாட்சி 1 ற்கு ஏற்பட்ட காயமானது கொடுங்காயம் என்று கருத்துக்கூறி சான்று வழங்கியதால் காயச்சான்றின் அடிப்படையில் வழக்கின் சட்டப்பிரிவினை 294(பி),323, 506 பத்தி இரண்டு, 326 இ.த.ச. ஆக பிரிவு மாற்றம் செய்தேன். வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபர் முன் ஜாமீன் பெற்று பிணையில் சென்றுவிட்டபடியால் அவர் கைது செய்யப்படவில்லை. எனது

விசாரணையில் இருந்தும் சாட்சிகளின் வாக்குமூலத்திலிருந்தும் சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் சட்டப்பிரிவுகள் 294(பி),323, 506 பத்தி இரண்டு, 326 இ.த.ச. 1860 ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>குறுக்கு விசாரணை</u>** :

1. அ.சா.1 நீலகண்டபிள்ளை தனது வாக்குமூலத்தில் சமபந்தி திருவிழாவில் கலந்துக்கொண்டு திரும்ப வரும்போது வழக்கு சம்பவம் நடைபெற்றதாக சொல்லியுள்ளரா என்றால் இல்லை. சரல் பழைய ரேசன்கடைக்கும், மெய்யல் வீட்டிற்கும் இடையே சுமார் 100 மீட்டர் தொலைவு இருக்கும்.

2. வழக்கு சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் இடமானது பழைய ரேசன் கடையின் தெற்கு பக்கம் என்று எனது விசாரணையில் துலங்கியதா என்றால் - ஆம். நான் விசாரிக்கும் போது அ.சா1 ற்கும், குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் இடையே ஊர் பிரச்சினை இருந்தது தெரிய வந்ததா என்றால் இல்லை. அ.சா2, அ.சா1 ன் சித்தப்பா என்று எனது விசாரணையில் தெரிய வந்ததா என்றால் இல்லை.

3. மருத்துவமனைக்கு அ.சா1 உடன் எத்தனை நபர்கள் சென்றார்கள் என்ற விவரம் எனக்குத் தெரியாது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் அ.சா1 ஐ கம்பால் தாக்கியதாக எனது விசாரணையில் துலங்கியதா என்றால் இல்லை. அ.சா1 ஐ நான் விசாரிக்கும்போது அவருக்கு ஏற்கனவே காயம் ஏற்பட்டு மேற்படி அதே மருத்துவரிடம் சிகிட்சை பெற்ற விவரம் துலங்கியதா என்றால் இல்லை.

4. வழக்கு சம்பவயிடத்தின் அருகில் இருந்த நபர்கள் யாரும் இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி குற்றம் சுமத்தப்பட்ட நபர் புகார்தாரராகவும், வாதி புகார்தாரராகவும் எங்கள் நிலையத்தில் கொடுக்கப்பட்ட மேற்படி வழக்கு சங்கதி தொடர்பான வழக்கானது **குற்ற எண் 91/2023** இந்நீதிமன்றத்தில் **சி.சி. 80/2024** ஆக நிலுவையில் உள்ளது என்று சொன்னால் சரிதான். சம்பவயிடம் செல்லாமலும் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமலும் புகார் மனுவினை முறைப்படி விசாரணை செய்யாமலும் நடக்காத சம்பவத்தை நடந்ததாக சித்தரித்து இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்ப்பும் இல்லை என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.